முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோராண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் சாலைகள் எடுக்கப்பட்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இதுவரை 41 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் சீர் செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தச் சாலையை ஆய்வு செய்து, சீர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 307, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

307—

அங்கன்வாடிக் கட்டடம்

*59872–திரு. சு. ரவி:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மிட்டப்பேட்டை ஊராட்சி, மிட்டப்பேட்டையிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மிட்டப்பேட்டையிலுள்ள அங்கன்வாடி மையம் 1984 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது.

2015 செப்டம்பர் 21]

இந்த அங்கன்வாடி மையத்திற்கென புல எண் 480/1-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காக சமூக நலக் கொள்கைகளை வகுத்து, எண்ணற்ற சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருபவர் சமூக விஞ்ஞானி நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) பிறந்த பெண் குழந்தையை அழிக்கும் கொடுமையான பழக்கத்தை அறவே ஒழிப்பதற்காக 'தொட்டில் குழந்தைத் திட்டம்' கொண்டு வந்தவர் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஆண் குழந்தை மட்டுமே வேண்டுமென்ற எண்ணத்தினை மாற்றிட பெண் குழந்தைகள் மேம்பாட்டிற்காக, 'பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்' கொண்டு வந்தவர் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தையின் பெயருக்கு முன்பாக தாயின் முதல் எழுத்தை Initial-ஆகப் போட்டுக்கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியவர் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) பிறக்கும்போதே பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் பெறும் கவுரவத்தையும், சுத்தத்தையும் ஏழைகள் வீட்டுப் பிள்ளைகளும் பெற வேண்டுமென்பதற்காக, 'அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம்' வழங்குபவர் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில் அக்கறை கொண்டு நாள்தோறும் சிந்தித்து, சிந்தித்து நல்ல திட்டங்களை வழங்கி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காவேரிப்பாக்கம் ஒன்றியம், மிட்டப்பேட்டை கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்ற பதிலைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட, மாங்காட்டுச்சேரி ஊராட்சியில் இருக்கின்ற அருந்ததிபாளையம், அரிகலபாடி ஊராட்சியில் இருக்கின்ற அம்பேத்கர் நகர் ஆகிய பகுதிகளில் வாழும் குழந்தைகள் நீண்ட தூரம் நடந்து அங்கன்வாடிக்குச் செல்கிறார்கள். அவர்களுக்கு அங்கேயே அங்கன்வாடி மையங்கள் புதியதாகத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அங்கன்வாடி மையம் அமைய வேண்டுமென்று சொன்னால், அது ஊரகப் பகுதியாக அல்லது நகர்ப்புறப் பகுதியாக இருந்தால் குறைந்தபட்சம் மக்கள்தொகை 400 ஆகவும், அதிகபட்ச மக்கள்தொகை 800 ஆகவும் இருக்க வேண்டும். அது மலைப் பகுதியாக இருந்தால் மக்கள்தொகை 300 ஆக இருக்க வேண்டும். குறு மையம் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் மக்கள்தொகை 150 ஆகவும், அதிகபட்சம் 400 ஆகவும் இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. புதியதாக அங்கன்வாடி மையங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளின் மக்கள்தொகையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அந்தக் குழு முடிவு செய்து, அதன்பிறகு அங்கன்வாடி மையம் தொடங்குவதற்கு வழிவகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த ஊர்கள் என்று குறிப்பிட்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தருவார்களேயானால், உடனடியாக அதை ஆய்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 308, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.